**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.121/2024**
**வழக்கு சாட்சி D.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நாட்டுத்துரை | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : நாச்சிமுத்துக்கவுண்டர் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : பெருமாள்கவுண்டன்வலசு | வயது | : சுமார் 47 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 24.07.2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், கொ.கீரனூர் கிராமம், பெருமாள்கவுண்டன்வலசில் வசிக்கும் லேட்.நாச்சிமுத்துக்கவுண்டர் மகன் சுமார் 47 வயதுள்ள நாட்டுத்துரை ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் பிரதிவாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | 11.09.2020 | பட்டா எண்.1736 வாதி பெயரில் உள்ள கணினி சிட்டா | பி.வா.சா.ஆ.1 |
| 02 | 23.07.2026 | 1435 பசலி ஆண்டிற்குரிய சாகுபடி அடங்கல் கணக்கு – உண்மை நகல் | பி.வா.சா.ஆ.2 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு நீதிமன்றம் சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

வாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை

குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.07.24 17:06:18 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்